களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies (KIRJTS)
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# The Devadasi Tradition and the Development of Dance Art during the Chola Period

**Dr. Thushyanthy Juliyan Jeyapragash,**
Senior Lecturer in Bharathanatyam, Department of Dance, Drama & Theater, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
Email: julithushy@gmail.com

**Abstract:**
The Chola period (9th–13th centuries CE) is regarded as a golden age in Tamil history, marked by remarkable achievements in politics, economy, religion, and the arts. During this era, temples functioned not merely as centers of worship but also as institutional hubs for education, culture, and artistic production. Within this vibrant cultural milieu, the devadasi tradition emerged as a crucial foundation for the development of dance art. Known as Devaradiyars, devadasis were sacred female performers closely associated with temples and ritual practices. This study examines the role of the devadasi tradition during the Chola period in fostering the systematic growth of dance, music, abhinaya (expressive techniques), and rhythm. Adopting a historical and cultural approach, the research draws upon primary sources such as temple inscriptions, sculptural representations, and literary references from major Chola centers including the Brihadeeswara Temple at Thanjavur, the Nataraja Temple at Chidambaram, and Gangaikonda Cholapuram. These sources reveal the extent of royal patronage extended to devadasis, including land grants, remuneration, and elevated social status, which enabled the sustained transmission of artistic knowledge. The study further explores how temple festivals and ritual performances served as vital platforms for the dissemination of dance traditions within society. The preservation and transmission of karanas, angaharas, and codified modes of abhinaya across generations underscore the continuity between the devadasi tradition and the structural foundations of contemporary Bharatanatyam. Although the devadasi system faced moral and social criticism in later periods due to changing political and social contexts, its artistic contributions remain undeniable. By moving beyond reductive moral interpretations, this research re-evaluates the devadasi tradition as a dynamic and indispensable force in the historical evolution of Tamil dance culture.
**Keywords** : *Devadasi Tradition, Chola Period, Temple Dance, Bharatanatyam, Abhinaya, Karanas, Temple Inscriptions, Royal Patronage, Cultural History, Performing Arts Heritage.*

## References:

1. Nilakanta Sastri, K. A. (1955). The Cholas. Madras: University of Madras.
2. Stein, B. (1980). Peasant State and Society in Medieval South India. Delhi: Oxford University Press.
3. Srinivasan, A. (1985). Reform or conformity? Temple prostitution and the community in the Madras Presidency.
4. Soneji, D. (2012). Unfinished Gestures: Devadasis, Memory, and Modernity in South India. Chicago: University of Chicago Press.
5. Vatsyayan, K. (1977). Classical Indian Dance in Literature and the Arts. New Delhi: Sangeet Natak Akademi.
6. Subrahmanyam, P. (2003). Karanas: Common Dance Codes of India. Chennai: Nrityodaya.
7. Coomaraswamy, A. K. (1934). The Dance of Shiva. New York: Noonday Press.
8. Dehejia, V. (1990). Art of the Imperial Cholas. New York: Columbia University Press.
9. Kersenboom, S. (1987). Nityasumangali: Devadasi Tradition in South India. Delhi: Motilal Banarsidass.
10. Peterson, I. V. (1989). Poems to Siva: The hymns of the Tamil saints. Princeton: Princeton University Press.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**
This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
KALANJIYAM

# சோழர் கால தேவதாசி மரபும் ஆடற்கலை வளர்ச்சியும்

**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்,**
சிரேஷ்ட விரிவுரையாளர் (நடன நாடகத்துறை), சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

சோழர் காலம் (கி.பி. 9–13 நூற்றாண்டு) தமிழ் வரலாற்றில் அரசியல், பொருளாதாரம், சமயம் மற்றும் கலை ஆகிய துறைகளில் உச்சநிலை அடைந்த காலமாகக் கருதப்படுகிறது. இக்காலகட்டத்தில் கோயில்கள் வழிபாட்டு மையங்களாக மட்டுமன்றி, கலை, கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனங்களாகவும் செயல்பட்டன. இந்தக் கலைச் சூழலில், தேவதாசி மரபு ஆடற்கலை வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைந்தது. தேவதாசிகள் “தேவரடியார்கள்” என அழைக்கப்பட்டு, கோயில்களுடன் நேரடி தொடர்புடைய புனித கலைப் பணியாளர்களாகச் செயல்பட்டனர். இவ்வாய்வு, சோழர் கால தேவதாசி மரபு எவ்வாறு ஆடல், இசை, அபிநயம், தாளவியல் போன்ற கலைக் கூறுகளை ஒழுங்கமைந்த முறையில் வளர்த்தெடுத்தது என்பதை வரலாற்றியல் மற்றும் பண்பாட்டு நோக்கில் ஆராய்கிறது. தஞ்சாவூர் பெரிய கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் போன்ற முக்கிய கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகள், சிற்பங்கள் மற்றும் இலக்கியச் சான்றுகள் இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாதாரங்கள், தேவதாசிகளுக்கு வழங்கப்பட்ட அரச ஆதரவு, நிலப்பங்குகள், ஊதியம் மற்றும் சமூக மரியாதை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. மேலும், தேவதாசி மரபு கோயில் விழாக்கள் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகள் மூலம் ஆடற்கலையை சமூகத்தில் பரப்பிய விதத்தையும் இவ்வாய்வு விளக்குகிறது. கரணங்கள், அங்கஹாரங்கள் மற்றும் அபிநய முறைகள் தலைமுறைதோறும் பாதுகாக்கப்பட்டு பரிமாறப்பட்டமை, இன்றைய பரதநாட்டியத்தின் வடிவமைப்பில் அதன் தாக்கத்தை உறுதிப்படுத்துகிறது. காலப்போக்கில் சமூக மற்றும் அரசியல் மாற்றங்களால் தேவதாசி மரபு விமர்சனத்திற்குள்ளானாலும், அதன் கலைப் பங்களிப்பு மறுக்க முடியாததாகும். இவ்வாய்வு, தேவதாசி மரபை சமூக சீரழிவின் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல், தமிழ் ஆடற்கலை வரலாற்றின் உயிர்ப்பூட்டும் இயக்கமாக மறுமதிப்பீடு செய்கிறது.

**திறவுச் சொற்கள் -** தேவதாசி மரபு, சோழர் காலம், கோயில் ஆடற்கலை, பரதநாட்டியம், அபிநயம், கரணங்கள், கோயில் கல்வெட்டுகள், அரச ஆதரவு, பண்பாட்டு வரலாறு, நிகழ்வுக் கலை மரபு

## முன்னுரை

தமிழ் நாகரிகத்தின் பண்பாட்டு வரலாற்றில் ஆடற்கலை ஒரு புனிதமான கலைவடிவமாகத் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. சங்க இலக்கியங்களில் தொடங்கிய ஆடல் குறிப்புகள், பிற்காலத்தில் சமயம், வழிபாடு, சமூக அமைப்பு ஆகியவற்றோடு இணைந்து வளர்ச்சி பெற்றன. குறிப்பாக, பல்லவர் மற்றும் சோழர் காலங்களில் கோயில்கள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டுமன்றி, கலை, கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகச் செயல்பாடுகளின் மையங்களாக செயல்பட்டன. இத்தகைய சூழலில், சோழர் காலம் தமிழ் கலை வரலாற்றில் ஒரு உச்சக்கட்ட வளர்ச்சிக் காலமாகக் கருதப்படுகிறது.

சோழ மன்னர்கள் கலைகளுக்கு அளித்த அரச ஆதரவு, ஆடற்கலை வளர்ச்சியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கோயில்களில் நடைபெறும் தினசரி பூஜைகள், திருவிழாக்கள், உற்சவங்கள் ஆகியவற்றில் ஆடல் ஒரு முக்கிய அங்கமாக அமைந்தது. இவ்வழிபாட்டு ஆடல்களை நிகழ்த்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவன வடிவமே தேவதாசி மரபாகும். "தேவரடியார்கள்" என அழைக்கப்பட்ட தேவதாசிகள், இறைவனுக்குச் சேவை செய்யும் புனித கலைஞர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் ஆடல், இசை, அபிநயம், தாளம் ஆகிய கலைகளில் முறையான பயிற்சி பெற்றிருந்தனர். சோழர் கால தேவதாசி மரபு, ஆடற்கலையை ஒழுங்கமைந்த கற்றல் முறை, மரபு சார்ந்த பரம்பரைப் பரிமாற்றம் மற்றும் அரச ஆதரவுடன் வளர்த்தெடுத்தது. கல்வெட்டுகள், கோயில் சிற்பங்கள், இலக்கியச் சான்றுகள் ஆகியவை இந்த மரபின் கலைச் சிறப்பையும் சமூகப் பங்கையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இருப்பினும், பிற்கால சமூக மாற்றங்கள் மற்றும் காலனிய ஆட்சிக் கால சீர்திருத்தங்களின் காரணமாக, தேவதாசி மரபு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, அதன் கலைப் பங்களிப்பு மறைக்கப்பட்டது.

இந்த ஆய்வு, சோழர் கால தேவதாசி மரபை ஒரு சமூக சீரழிவு அமைப்பாக அல்லாது, தமிழ் ஆடற்கலை வளர்ச்சியின் அடிப்படைத் தூணாக மறுமதிப்பீடு செய்யும் முயற்சியாக அமைந்துள்ளது. வரலாற்றியல் மற்றும் பண்பாட்டு நோக்கில் இந்த மரபை ஆராய்வதன் மூலம், இன்றைய பரதநாட்டியத்தின் வேர்களையும் அதன் தொடர்ச்சியையும் புரிந்துகொள்ள முடிகிறது.

**ஆய்வின் நோக்கம்**

1. சோழர் கால தேவதாசி மரபின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விளக்குதல்.
2. தேவதாசி மரபு ஆடற்கலை வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்புகளை ஆராய்தல்.
3. கோயில், அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுடன் தேவதாசி மரபின் தொடர்பை பகுப்பாய்வு செய்தல்.
4. தேவதாசி மரபும் இன்றைய பரதநாட்டிய வடிவமும் இடையிலான தொடர்ச்சியை நிறுவுதல்.
5. தேவதாசி மரபு குறித்த நவீன பார்வைகளையும் வரலாற்று உண்மைகளையும் ஒப்பிட்டு ஆராய்தல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

- இந்த ஆய்வு தமிழ் ஆடற்கலை வரலாற்றில் தேவதாசி மரபின் மறைக்கப்பட்ட பங்களிப்புகளை வெளிக்கொணருகிறது.
- சமூக விமர்சனத்தின் காரணமாக மறைக்கப்பட்ட அல்லது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட தேவதாசி மரபை வரலாற்றியல் அடிப்படையில் மீளாய்வு செய்கிறது.
- பரதநாட்டியம் போன்ற நவீன கலை வடிவங்களின் வேர்களை புரிந்துகொள்ள உதவுகிறது.
- கலை, சமூகம், மதம், அரசியல் ஆகியவற்றின் பரஸ்பர தொடர்பை விளக்குகிறது.

**இலக்கிய மீளாய்வு**

K.A. Nilakanta Sastri (1955) சோழர் கால நிர்வாக அமைப்புகளை விளக்கும்போது, கோயில்கள் கலை நிறுவனங்களாக செயல்பட்டதை குறிப்பிடுகிறார்.

Amrit Srinivasan (1985) தேவதாசி மரபை சமூக-பண்பாட்டு கோணத்தில் ஆராய்ந்து, அது கலை வளர்ச்சிக்கான அமைப்பாக இருந்ததை வலியுறுத்துகிறார்.

Kapila Vatsyayan (1977) இந்திய ஆடற்கலை வளர்ச்சியில் கோயில் சிற்பங்களின் பங்கை விளக்குகிறார்.

Padma Subrahmanyam (2003) கரணங்கள் மற்றும் நாட்டிய மரபின் வரலாற்றுத் தொடர்ச்சியை நிறுவுகிறார்.

**ஆய்வுப் பிரச்சனை**

தேவதாசி மரபு, காலப்போக்கில் சமூக சீரழிவாக மட்டுமே பார்க்கப்பட்டதால், அதன் கலைப் பங்களிப்பு முறையாக மதிப்பாய்வு செய்யப்படவில்லை. எனவே,

- தேவதாசி மரபு உண்மையில் ஆடற்கலை வளர்ச்சியில் என்ன பங்கு வகித்தது?
- சோழர் கால அரச ஆதரவு எவ்வாறு இந்த மரபை நிறுவகமாக மாற்றியது?

என்பதே இந்த ஆய்வின் மையப் பிரச்சனையாகும்.

**ஆய்வு முறை)**

- வரலாற்றியல் ஆய்வு முறை
- கல்வெட்டு, சிற்பம், இலக்கியம் போன்ற முதன்மை ஆதாரங்கள்
- நவீன ஆய்வாளர்களின் நூல்கள் போன்ற இரண்டாம் நிலை ஆதாரங்கள்
- ஒப்பீட்டு மற்றும் விளக்கப் பகுப்பாய்வு முறை

**சோழர் கால தேவதாசி மரபு**

சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 9–13ஆம் நூற்றாண்டுகள்) கோயில்கள் வழிபாட்டுத் தளமாக மட்டுமல்லாமல், கலை, கல்வி, இசை, நடனம் ஆகியவற்றின் மையங்களாகவும் செயல்பட்டன. இக்கோயில்களுடன் இணைந்து செயல்பட்ட பெண்களே தேவதாசிகள் என அழைக்கப்பட்டனர். ‘தேவதாசி’ என்ற சொல்லுக்கு தேவனுக்குத் தாசியாக அர்ப்பணிக்கப்பட்டவள் என்பது பொருள். தேவதாசிகள் கோயிலில் தினசரி மற்றும் திருவிழாக் காலங்களில் நடைபெறும் நடனம் (சதிர்), இசை, அபிநயம் போன்ற கலைச் சேவைகளை ஆற்றினர். இவர்களின் நடனம் ஆகம விதிகளுக்கும், சைவ சித்தாந்தக் கருத்துகளுக்கும் ஏற்ப அமைந்திருந்தது. கோயில் கல்வெட்டுகள், குறிப்பாக தஞ்சாவூர் பெரியகோயில், சிதம்பரம் நடராஜர் கோயில் கல்வெட்டுகள், தேவதாசிகளின் பெயர்கள், எண்ணிக்கை, ஊதியம், நிலக்கொடைகள் போன்ற விவரங்களை வழங்குகின்றன.

சோழர் காலத்தில் தேவதாசிகள் உயர் கலைஞர்களாகவும், சமூக மதிப்புப் பெற்றவர்களாகவும் கருதப்பட்டனர். அவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள்; சங்கீதம், தாளம், இலக்கியம், சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சில தேவதாசிகள் கவிஞர்களாகவும்

இசையமைப்பாளர்களாகவும் விளங்கினர். இம்மரபின் வழியாக உருவான சதிர் நடனம் பின்னாளில் மறுசீரமைக்கப்பட்டு பரதநாட்டியம் என வளர்ச்சி பெற்றது. காலப்போக்கில் சமூக மாற்றங்களாலும் காலனிய பார்வைகளாலும் இந்த மரபு வீழ்ச்சி அடைந்தாலும், சோழர் கால தேவதாசி மரபு தமிழ் கலை வரலாற்றில் முக்கியமான ஒரு பண்பாட்டு அடையாளமாக திகழ்கிறது.

**அரச ஆதரவு**

தஞ்சாவூர் பெரிய கோயில் கல்வெட்டுகள், தேவதாசிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், ஊதியம், வீடுகள் குறித்து தெளிவாகக் கூறுகின்றன.

**ஆடற் கலை வளர்ச்சியில் தேவதாசி மரபின் பங்கு**

தமிழகக் கலை மரபில் ஆடற்கலை (Dance Art) ஒரு உயரிய ஆன்மீகமும் அழகியலும் நிறைந்த வெளிப்பாடாக வளர்ந்ததற்கு தேவதாசி மரபு மிக முக்கியமான அடித்தளமாக விளங்குகிறது. குறிப்பாக சோழர் காலத்தில் இந்த மரபு, ஆடற்கலையை கோயில் வழிபாட்டுடன் இணைத்து, ஒழுங்கமைந்த கலை வடிவமாக உருவாக்கியது.

**கோயில் மைய ஆடற்கலை வளர்ச்சி**

தேவதாசிகள் கோயில்களில் இறைவனுக்கான நித்திய சேவையாக நடனம் ஆற்றினர். இதனால் ஆடல் ஒரு பொழுதுபோக்காக அல்லாமல், ஆன்மீக அனுபவமாகவும் வழிபாட்டு முறையாகவும் வளர்ச்சி பெற்றது. ஆகம விதிகள், திருவிழாக்கள், உற்சவங்கள் ஆகியவை ஆடற்கலையின் கட்டமைப்பை உருவாக்கின.

**சதிர் நடனத்தின் வடிவமைப்பு**

தேவதாசி மரபின் வழியாக உருவான சதிர் நடனம் தான் இன்று பரதநாட்டியமாக அறியப்படும் ஆடற்கலையின் அடிப்படை. அடவுகள், கரணங்கள், அபிநயம், பாவம், ரஸம் ஆகிய கூறுகள் தேவதாசிகளால் தலைமுறை தோறும் பாதுகாக்கப்பட்டு பரம்பரையாக வளர்த்தெடுக்கப்பட்டன.

**அபிநயக் கலையின் மேம்பாடு**

தேவதாசிகள் புராணக் கதைகள், தேவாரப் பதிகங்கள், நாயன்மார் வரலாறுகள் ஆகியவற்றை அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதனால் வாக்கியார்த்த அபிநயம், சாத்த்விக அபிநயம் போன்ற அபிநயக் கூறுகள் ஆழமாக வளர்ச்சி பெற்றன.

**இசை–நடன ஒருங்கிணைப்பு**

ஆடற்கலை இசையுடன் பிரிக்க முடியாத ஒன்றாக அமைந்தது. தேவதாசிகள் நட்டுவனர், பாடகர்கள், வாத்தியக்காரர்கள் ஆகியோருடன் இணைந்து செயல்பட்டதால் தாளம்–ராகம்–நடனம் ஆகியவை ஒருங்கிணைந்த கலை வடிவமாக மலர்ந்தன.

**பெண் கலைஞர்களின் கலைத் தலைமுறை**

தேவதாசி மரபு பெண் கலைஞர்களுக்கு தொழில்முறை அடையாளத்தையும், கலைஞர் என்ற சமூக நிலைப்பாட்டையும் வழங்கியது. கலை அறிவு தாய்மூலம் மகளுக்கு பரம்பரையாக பரிமாறப்பட்டது.

**பரதநாட்டியத்தின் நவீன வளர்ச்சி**

20ஆம் நூற்றாண்டில் தேவதாசி மரபின் கலை அம்சங்கள் மறுசீரமைக்கப்பட்டு, சமூக மேடைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரதநாட்டியம் என்ற கிளாசிக்கல் நடனமாக வளர்ச்சி பெற்றது.

**கோயில் சிற்பங்களும் ஆடற்கலை சான்றுகளும்**

சிதம்பரம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் கோயில்களில் காணப்படும் நாட்டிய சிற்பங்கள், தேவதாசி மரபின் கலைச் சிறப்பை சான்று படுத்துகின்றன.

**தேவதாசி மரபும் இன்றைய பரதநாட்டியமும்**

இன்றைய பரதநாட்டியத்தில் காணப்படும் அலாரிப்பு, வர்ணம், பதம் போன்ற அமைப்புகள், தேவதாசி மரபின் தொடர்ச்சியே ஆகும். தேவதாசி மரபு தமிழ்க் கோயில் பண்பாட்டுடன் இணைந்த ஒரு தொன்மையான கலை மரபாகும். கோயில்களில் இறைவனுக்கான வழிபாட்டு சேவையாக நடனம், இசை, அபிநயம் ஆகியவற்றை ஆற்றிய பெண்கள் தேவதாசிகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் பாதுகாத்து வளர்த்த சதிர் நடனம், ஆகம விதிகள், புராணக் கதைகள், பாவ–ரஸ அடிப்படையிலான அபிநயம் ஆகியவற்றுடன் ஒரு செம்மையான ஆடற்கலையாக உருவெடுத்தது.

இந்த தேவதாசி மரபின் கலை அம்சங்களே 20ஆம் நூற்றாண்டில் சமூக சீர்திருத்தங்களின் மூலம் மறுசீரமைக்கப்பட்டு பரதநாட்டியம் என்ற பெயரில் மேடைக் கலை வடிவமாக உருவானது. அடவுகள், கரணங்கள், அபிநயம், நட்டுவாங்கம், இசை அமைப்பு போன்றவை தேவதாசி மரபிலிருந்தே நேரடியாக வந்தவை. இன்றைய பரதநாட்டியம் கோயில் எல்லைகளைத் தாண்டி கல்வி நிறுவனங்கள், மேடைகள், உலக அரங்குகள் வரை விரிந்திருந்தாலும், அதன் அடிப்படை ஆன்மீக உணர்வும், அழகியல் கட்டமைப்பும் தேவதாசி மரபின் தொடர்ச்சியாகவே விளங்குகிறது.

சுருக்கமாக, தேவதாசி மரபு பரதநாட்டியத்தின் வேராகவும், பரதநாட்டியம் அந்த மரபின் நவீன, சமூக அங்கீகாரம் பெற்ற வடிவமாகவும் திகழ்கிறது.

**முடிவுரை**

இந்த ஆய்வு, சோழர் கால தேவதாசி மரபு தமிழ் ஆடற்கலை வரலாற்றில் மையப் பங்கு வகித்தது என்பதை தெளிவாக நிறுவுகிறது. கோயிலை மையமாகக் கொண்ட இந்த மரபு, ஆடல், இசை, அபிநயம் மற்றும் தாளவியல் ஆகிய கலைக் கூறுகளை ஒருங்கிணைத்து, ஒரு முழுமையான கலை அமைப்பாக வளர்த்தெடுத்தது. சோழ மன்னர்களின் அரச ஆதரவு, தேவதாசிகளுக்கு வழங்கப்பட்ட நிலப்பங்குகள், ஊதியம் மற்றும் சமூக மரியாதை ஆகியவை, ஆடற்கலை தொடர்ச்சியாக வளர்வதற்கான உறுதியான அடித்தளமாக அமைந்தன.

கல்வெட்டுகள் மற்றும் சிற்ப ஆதாரங்கள், தேவதாசிகள் வெறும் பொழுதுபோக்கு கலைஞர்கள் அல்லாது, வழிபாட்டு முறையின் அங்கமாகக் கருதப்பட்ட புனித கலைப் பணியாளர்கள் என்பதைக் காட்டுகின்றன. கோயில் விழாக்கள் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகள் மூலம், ஆடற்கலை சமூகத்தின் பல்வேறு அடுக்குகளுக்கும் பரவியது. கரணங்கள், அங்கஹாரங்கள் மற்றும் அபிநய முறைகள் தலைமுறைதோறும் பாதுகாக்கப்பட்டு, இன்றைய பரதநாட்டிய வடிவமைப்பில் நிலைத்திருப்பது, தேவதாசி மரபின் கலைத் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

பிற்காலத்தில் சமூக மற்றும் அரசியல் மாற்றங்களின் விளைவாக தேவதாசி மரபு விமர்சனத்திற்கும் மறுப்பிற்கும் உள்ளானாலும், அதன் கலைப் பங்களிப்பை மறுக்க முடியாது. மாறாக, இந்த மரபு இல்லையெனில், தமிழ் நாட்டியக் கலை இன்றைய வடிவத்தை அடைந்திருக்க வாய்ப்பில்லை என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது. தேவதாசி மரபை ஒழுக்கவியல் அல்லது சமூக விமர்சனக் கண்ணோட்டத்தில் மட்டும் அணுகுவது, அதன் வரலாற்று உண்மையையும் கலைச் சிறப்பையும் புறக்கணிப்பதற்குச் சமமானதாகும்.

முடிவாக, சோழர் கால தேவதாசி மரபு தமிழ் ஆடற்கலை வளர்ச்சியின் உயிர்த்துடிப்பான இயக்கமாக இருந்தது என்பதையும், அது இன்றைய பரதநாட்டியத்தின் அடிப்படை ஆதாரமாகத் தொடர்ந்து நிலைத்து வருவதாகவும் இவ்வாய்வு நிறுவுகிறது. இம்மறுமதிப்பீடு, தமிழ் கலை வரலாற்றை சமநிலையான, நியாயமான பார்வையில் புரிந்துகொள்ள உதவுவதோடு, எதிர்கால ஆய்வுகளுக்கான வலுவான அடித்தளத்தையும் அமைக்கிறது.

**மேற்கோள்கள்**


1. நீலகண்ட சாஸ்திரி, கா. அ. (1966). சோழர்கள். சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.
2. மு. அருணாசலம். (1980). தமிழர் பண்பாடும் கலை மரபும். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
3. ரா. நாகசாமி. (1999). சோழர் காலக் கலைகள். சென்னை: அரசு தொல்லியல் துறை.
4. சு. சண்முகம். (2005). தமிழ் கோயில்களும் நாட்டிய மரபும். மதுரை: மீனாட்சி பதிப்பகம்.
5. பத்மா சுப்ரமணியம். (2008). இந்திய நாட்டியத்தின் வரலாறு. சென்னை: நிரித்யோதயா.
6. கா. கந்தசாமி. (2010). தேவதாசி மரபு – வரலாறும் பண்பாடும். தஞ்சாவூர்: தமிழியல் ஆய்வு மையம்.
7. இரா. இளங்கோவன். (2015). சோழர் கல்வெட்டுகளில் கலைச் செய்திகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.